FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313284

1. District : திண்டுக்கல் PS: உணவு கலப்பு மற்றும் கண்காணிப்பும் பிரிவு Year: 2026 FIR No.: 15/2026 Date: 26.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the P.C (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: B.N.S.S Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.15 hrs Time to : 21.15 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 26.10.2026 Time : 12.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 26.10.2026 Time : 13.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: நகராட்சி அலுவலகம், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம் சுமார் 5 கி.மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : [illegible] (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 1/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : [illegible] (g) Address இராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் [illegible] மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. முத்துப்பாண்டியன், உதவி ஆணையர், 2) திரு. ராஜ்குமார், மேலாண்மை இயக்குனர்
3). திரு. கோ. மணிவண்ணன், வங்கி உதவியாளர், 4). திரு. ஆனந்தன், தொழில் முனைவோர்
5). திரு. B. சந்தன மோகன் (தனியார்), மற்றும் 6). திரு. K. பாபு (Contractor)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: திண்டுக்கல் நகராட்சி அலுவலகம்
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 26.10.2026 தேதி 12.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.சூ.மீனலோசனி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 26.10.2026-ம் தேதி 13.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2026 u/s. 7, 7(A) of P.C Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and sec.106 BNSS-2023 ன்படி வழக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed T.I.R.KANNAN ..... Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... VAC, Sivaganga ..... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

26/10/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.10.2026 at 13.45 hrs.

Name: பெயர் P. THANGA RAMAN
Rank: நிலை Superintendent of Police,
No. எண் ..... VAC, Sivagangai

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.15/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், சூ.மீனலோசனி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள், இராமநாதபுரம், பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, நாள்: 26.10.2026, பொருள்: சிவகங்கை மாவட்டம் - தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை சோதனை சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக, பார்வை : இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள்:23.10.2026, கடந்த 23.10.2026ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியில் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்கள் வரி வசூல், சொத்து வரி பெயர் மாற்றம், கட்டிட அனுமதி உத்தரவு உள்ளிட்ட சேவை பணிகள் மற்றும் ஒப்பந்த பணிகளுக்கு ஒப்பந்ததாரர் மற்றும் பொதுமக்களிடம் லஞ்சம் கேட்டு பெறுவதாக, ரகசிய தகவல் உள்ளதாக தெரிவித்ததன் பேரில், 23.10.2026-ஆம் தேதி பிற்பகல் சுமார் 15.15 மணிக்கு சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, திருப்பத்தூர் ரோட்டில் அமைந்துள்ள தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.பி.தங்கராமன் மற்றும் குழுவினருடன் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, பொதுப்பிரிவில் இருந்த மேலாளர் திரு.M.பத்மநாபன், வயது 56/2026, த/பெ.முருகேசன் என்பவரை சோதனையிட்டபோது, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.500/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் மேற்படி பணம் அன்றாட செலவுகளுக்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்றும், அதனை பணியாளர்களின் கையிருப்பு ரொக்கப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். மேற்படி பணியாளர்களின் கையிருப்பு ரொக்கப்பதிவேட்டினை சரிபார்த்தபொது, 23.10.2026ம் தேதி அவரது கையிருப்புப்பணம் ரூ.500/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்படி பணம் ரூ.500/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரிடம், நகராட்சி ஆணையாளர் குறித்து கேட்டபோது,

அவர் நகராட்சி ஆணையாளர் திரு.ராஜமாணிக்கம் என்பவர் சிவகங்கை மாவட்ட ஆட்சியரது கூட்டத்தில் கலந்துகொள்ள சென்றுள்ளதாக கூறினார். பின்னர் விசாரணைக்காக கேட்டதன்பேரில், மேலாளர் திரு.M.பத்மநாபன் ஆஜர் செய்த தேவகோட்டை நகராட்சி வருவாய் பிரிவு வருகைப்பதிவேடு-2026 விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வருவாய்ப்பிரிவில் இருந்த வருவாய் உதவியாளர் திரு.கா.மணிகண்டன், வயது 30/2026, த/பெ.காளிமுத்து என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.152/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் மேற்படி பணம் பேருந்து கட்டணம் மற்றும் கை செலவிற்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்றும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.152/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது அலைபேசி எண்.8778914243-ல் உள்ள G.Pay பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, Veera Veera என்ற பெயரிலான 8883905778-என்கிற எண்ணிலிருந்து அக்டோபர் 2025ம் மாதம் முதல் அக்டோபர் 2026 மாதம் வரையிலான காலத்தில் பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.29,600/- சந்தேகத்திற்கிடமான முறையில் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு,

வ.எண்.	தேதி	தொகை (ரூ.)
1	20.11.2025	7000/-
2	05.12.2025	2000/-
3	10.12.2025	2100/-
4	14.02.2026	5000/-
5	07.07.2026	3500/-
6	07.07.2026	500/-
7	06.10.2026	2500/-
8	10.10.2026	2500/-
9	11.10.2026	1000/-
10	16.10.2026	3500/-
மொத்தம்		29,600/-

மேற்படி G.Pay பண பரிவர்த்தனை சம்மந்தமாக அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி அவரது அலைபேசி எண்ணிலிருந்து G.Pay பண பரிவர்த்தனை விபரங்களை பிரிண்டு எடுக்கப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, நகரமைப்பு பிரிவில் இருந்த திரு.S.சுரேஷ், வயது 41/2026, த/பெ.S.சேகர், நகரமைப்பு ஆய்வாளர் என்பவரை

சோதனையிட்டபோது, அவரிடம் கையிருப்பு பணம் எதுவும் இல்லை. இதுதொடர்பாக அவரை விசாரித்தபோது, அவர் அன்றாட செலவுகளுக்கு Credit Card-ஐ பயன்படுத்தி வருவதாகவும், அதனால் கையில் பணம் வைத்துக்கொள்வதில்லை என்றும் கூறினார். இந்த திடீர் சோதனையின்போது, பொறியியில் பிரிவில் இருந்த, திரு.N.மீரா அலி, வயது 57/2026, த/பெ.நைனா முகமது, பொறியாளர் என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.610/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது, தனது சாப்பாட்டு செலவு மற்றும் சொந்த செலவுகளுக்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.610/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர் திரு.மீரா அலி அவர்கள் ஆய்வுக்குழுவினரிடம், உதவிப்பொறியாளர் திரு.முத்துக்குமார் என்பவர் விடுப்பில் உள்ளதாகவும், குடிநீர் பொறுப்பாளர் திரு.ஆண்டவர் என்பவர் வரி வசூல் பணிக்காக வெளியில் சென்றுள்ளதாகவும் கூறினார். இந்த திடீர் சோதனையின்போது, பொறியியல் பிரிவில் இருந்த தனியர் திரு.B.சந்திர மௌலி, வயது 35/2026, த/பெ.S.பூபதி, க.எண்.50/2, ஜெமினி நகர், தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் என்பவரை சோதனையிட்டபோது, அவரது பின்பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணி பர்சில் பணம் ரூ.1300/- இருந்தது. அந்தப்பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் செலவுகளுக்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்று கூறியதால், மேற்படி பணம் ரூ.1300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரை சோதனையிட்டபோது, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக மொத்தம் ரூ.50,000/- (ரூ.500 X 100) இருந்தது. இதுசம்மந்தமாக அவரை விசாரணை செய்தபோது, அவர், திருமதி.சிவகாமி சுந்தரி என்பவர் தேவகோட்டை நகராட்சியில் மெயின் பைப் லைன் பழுதினை சரிசெய்வது சம்மந்தமான டெண்டர் எடுத்துள்ளதாகவும், அந்த டெண்டர் சம்மந்தமான பழுது நிவர்த்தி சம்மந்தமான வேலைகளை தான் மேற்படி ஒப்பந்ததாரருக்கு செய்து கொடுத்து வருவதாகவும், அவ்வாறு டெண்டர் சம்மந்தமாக பணிகள் மேற்கொள்ளும் பொழுது, பைப் லைன் பழுது நிவர்த்தி செய்வது தொடர்பாக பராமரித்து வரும் பதிவேட்டில் குடிநீர் பொறுப்பாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர், உதவி பொறியாளர் ஆகியோரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றும், அந்த பதிவேட்டில் தேதி வாரியாக எந்தெந்த இடங்களில், என்னென்ன மெட்டீரியல்ஸ் பயன்படுத்தப்பட்டு, எத்தனை வேலையாட்களை பயன்படுத்தி வேலை செய்யப்பட்டது என்று விபரத்தை குறிப்பிட்டு, அதற்கேற்றாற்போல் நகராட்சியிலிருந்து ஒப்பந்ததாருக்கு பணம் காசோலை மூலமாக வழங்கப்பட்டு வருகிறது

என்றும், தான் மேற்படி நோட்டினை எழுதி பராமரித்து வருவதாகவும், அந்த நோட்டில் குடிநீர் பொறுப்பாளர் திரு.ஆண்டவர், பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.செந்தில்குமார் மற்றும் உதவி பொறியாளர் திரு.முத்துக்குமார் ஆகியோரிடம் கையெழுத்து வாங்குவதற்காகவும், நிலுவையில் இருந்த பில்களை தயார் செய்து கொடுக்க அவர்களை பார்ப்பதற்கு வந்ததாகவும் கூறினார். மேற்படி பணம் ரூ.50,000/- குறித்து விளக்கம் கேட்டபோது, முன்னுக்கு பின் முரணாக கூறினார். மேற்படி பணம் குறித்து, திரு.சந்திர மௌலி சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினால் அவரிடமிருந்த கணக்கில் வராத பணம் மேற்படி பணம் **ரூ.50,000/-** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது அலைபேசி எண்.9384196491-ல் உள்ள Phone Pay UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, மேற்பார்வையாளர் திரு.செந்தில்குமார் என்பவரது அலைபேசி எண்.9629629897-க்கு 20.01.2026ம் தேதி **ரூ.30,000/-**மும், 13.10.2026ம் தேதி **ரூ.1000/-**மும் அனுப்பியிருந்தார். இதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி இரண்டு Phone Pay UPI பரிவர்த்தனைகளை பிரிண்ட் எடுக்கப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்து 15.02.2026ம் தேதி முதல் 20.10.2026 தேதி வரையிலான குடிநீர் மெயின் குழாய் பழுது சரிசெய்வது தொடர்பான பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, பொறியியல் பிரிவில் இருந்த பணி மேற்பார்வையாளர் திரு.R.செந்தில்குமார், வயது 50/2026, த/பெ.வீ.ரெங்கசாமி என்பவரை சோதனை செய்தபோது, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணி பர்சில் பணம் ரூ.2020/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் மருத்துவ செலவுகளுக்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.2020/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, நகராட்சி அலுவலகத்தின் வரவேற்பு அறையில் நின்றுகொண்டிருந்த தனியர் திரு.K.பாலு, த/பெ.கருப்பையா, காத்தான் வயல், உஞ்சனை அஞ்சல், அரியக்குடி வழி, சிவகங்கை மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது, அவரது இடது மேல் வெளிப்பக்க சட்டைப் பாக்கெட்டினுள் பணம் ரூ.540/-இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் கை செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.540/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், சோதனையில், அவரது இடது மேல் உட்பக்க சட்டைப் பாக்கெட்டினுள் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக மொத்தம் ரூ.10,000/- (ரூ.500 X 20)ம் இருந்தது.

இதுசம்மந்தமாக அவரிடம் விசாரித்தபோது, அவர் தேவகோட்டை நகராட்சியில் கப்பலூர் சாலையில் பேவர் சாலை அமைத்தல் பணி மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டதாகவும், அந்த பணியில் நிலுவையில் உள்ள தொகை சம்மந்தமாக பொறியியல் பிரிவு உதவிப்பொறியாளர் திரு.முத்துக்குமார் என்பவரை சந்திக்க வந்ததாகவும் கூறினார். மேற்படி பணம் ரூ.10,000/- குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. பின்னர் விசாரணைக்காக ஒப்பந்ததாரர் திரு.பாலு தேவகோட்டை நகராட்சியில் மேற்கொண்ட பேவர் பிளாக் சாலை மற்றும் சிறுபாலம் பணிகள் தொடர்பான ஆவணங்கள் குறித்து கேட்டபோது, திரு.நை.மீரா அலி, நகராட்சி பொறியாளர் அறிவுறுத்தல்படி, மேற்படி ஒப்பந்த பணி தொடர்பாக பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.ரெ.செந்தில்குமார் ஆஜர் செய்த *(1) தேவகோட்டை நகராட்சி, கப்பலூர் நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி தொடர்பான அளவு புத்தகம் எண்.51/2022-23, (2) பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி தொடர்பான கோப்பு எண்.0679/E1/2022 மற்றும் (3) பொறியியல் பிரிவின் 2026ம் ஆண்டிற்கான வருகைப்பதிவேடு* ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுசம்மந்தமான விசாரணையில், மேற்படி திரு.பாலு ஒப்பந்ததாரரிடமிருந்த கணக்கில் வராத பணம் **ரூ.10,000/-**த்தை அவர் மேற்படி பேவர் பிளாக் சாலை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி சம்மந்தமாக உதவி பொறியாளர் திரு.முத்துக்குமார் என்பவருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக கருதி, விசாரணைக்காக அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் பணியிலிருந்த 1) திரு.பத்மநாபன், மேலாளர், 2) திரு.மணிகண்டன், வருவாய் உதவியாளர், 3) திரு.சுரேஷ், நகரமைப்பு ஆய்வாளர், 4) திரு.மீரா அலி, நகராட்சி பொறியாளர், 5) திரு.செந்தில் குமார், பணி மேற்பார்வையாளர், 6) திரு.சந்திர மௌலி (தனியர்) மற்றும் 7) திரு.K.பாலு (தனியர்) ஆகியோரை துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.60,000/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக திரு.முத்துக்குமார், உதவி பொறியாளர், திரு.செந்தில்குமார், பணி மேற்பார்வையாளர், திரு.கா.மணிகண்டன், வருவாய் உதவியாளர், திரு.ஆண்டவர் குடிநீர் பொறுப்பாளர் மற்றும் திரு.B.சந்திர மௌலி, திரு.K.பாலு ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம். சூ.மீனலோசனி 26.10.2026.

Sir, Received the complaint on 26.10.2026 at 12.45 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.15/2026 u/s 7, 7(A) of P.C Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and sec.106 BNSS 2023 on 26.10.2026 at 13.00 hrs. sd.P.Thanga Raman, Deputy Superintendent of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் துணை ஆய்வுழு அலுவலரால் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

26/10/26

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.